# 2005

## ஒன்ராறியோ

## வரவு செலவுத் திட்டம்

*முக்கிய அம்சங்கள்*

மக்களில் முதலீடு செய்தல்
எமது பொருளாதாரத்தை வலுவாக்குதல்








## 2005 வரவு செலவுத் திட்டம் மக்களில் முதலீடு செய்து எமது பொருளாதாரத்தைப் பலப்படுத்துகின்றது

மக்கின்ரி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம், பற்றாக் குறையை அகற்றுவதில் கணிசமாக முன்னேறி வரும் வேளையில், கல்வி, சுகாதாரம், ஒரு வலுவான பொருளாதாரம் என்பவற்றில் முக்கிய முதலீடுகளைச் செய்கின்றது.

2005 வரவு செலவுத் திட்டம் பின்வருவனவற்றில் எமது முன்னேற்றத்தைக் கட்டியெழுப்புகின்றது:

- 40 வருடங்களில் மிகப் பெரிய - வரலாற்று முக்கியத்துவம் மிக்க, பல்லாண்டு முதலீட்டுடன் கூடிய கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்வி;
- அதிக சிறுவர் பேணல் இடவசதிகள், சிறிய வகுப்பறைகள், எமது பாடசாலை அமைப்புக்களில் அமைதியும் உறுதிநிலையும் கொண்ட கல்வி;
- அதிக வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள், குறைவான காத்திருப்பு நேரங்கள், மக்களை ஆரோக்கியமாக வைத்திருத்தல் என்பவற்றை உள்ளடக்கிய சுகாதாரம்;
- கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்வி, உட்கட்டமைப்பு, புதுமை புகுத்தல், முக்கிய துறைகள் ஆகியவற்றில் முதலீடு செய்தல் என்பவற்றினூடாக ஒரு வலுவான பொருளாதாரம்; மற்றும்
- பற்றாக்குறைக் குறைப்பு - 2004-05இல் வரவு செலவுப் பற்றாக்குறையை 2.5 பில்லியன் டொலரால் குறைத்தல் - அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்றதன் ஏறக்குறைய பாதியளவு

## உயர் நிலையை அடைதல்: கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்விக்கான மக்கின்ரி அரசாங்கத்தின் திட்டம்

ஒன்ராறியோவுக்கு போட்டிக்குரிய பாலாபலனையும் பொருளாதார வளரச்சியையும் தரவல்ல ஓர் அத்தியாவசியமான கேந்திர முதலீட்டினை எமது மக்களில் நாம் மேற்கொள்கிறோம். வினைத்திறன் மிக்க பணியணி ஒன்றின் மூளைவலுவும், எவ்வாறு செய்வதெனத் தெரிந்திருத்தலுமே 21ஆம் நூற்றாண்டின் பொருளாதாரத் திருப்பு முனையாகும்.

- கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பயிற்சிகளுக்கென மேலும் 6.2 பில்லியன் டொலர் வழங்கப்படும் - 40 வருடங்களில், கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்வியில் மிகப் பெரிய, பல்லாண்டு முதலீடு;
- 2005-06இல் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள 135,000 மாணவர்கள் அதிக பொருளாதார உதவியைப் பெறுவர்;
- பூர்வீகக்குடியினர், உடற் குறைபாடுடையோர், பிரெஞ்சு மொழி பேசுவோர், புதிய கனேடியர்கள், முதற் பரம்பரை மாணவர்கள் ஆகியோர் கல்வி பெறும் வாய்ப்பினை அதிகரிப்பதுடன் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்வியில் பதிவு செய்யும் மாணவர்களது எண்ணிக்கையை கணிசமான அளவு அதிகரித்தல்.

## மேலும் சிறந்த சுகாதாரம்

சுகாதார பராமரிப்பில் மேலதிகமாக முதலீடு செய்வதனூடாக, காத்திருப்பு நேரங்களைக் குறைப்பதற்கும், மக்களை ஆரோக்கியத்துடன் வைத்திருப்பதற்கும் அதிக வைத்தியர்கள், தாதியர்களை வழங்குகின்றோம்.

- ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட ஒன்ராறியோ மக்களைப் பேணும் 52 குடும்ப சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன- இது 2007-08 அளவிலான எமது இலக்காகிய 150இன் மூன்றில் ஒரு பங்காகும்;
- இவ்வருடம் மேலும் 13 சதவீதம் கண் சவ்வு நோய்ச் சத்திர சிகிச்சை, மேலும் 8 சதவீதம் இருதய சிகிச்சை நடைமுறைகள், மேலும் 16 சதவீதம் இடுப்பு மற்றும் முழங்கால் மாற்றுச் சிகிச்சைகள், மேலும் 19 சதவீதம் MRI பரிசோதனைகள், சுமார் 2,900 மேலும் அதிக புற்று நோய்ச் சத்திர சிகிச்சைகள்;
- சமூகத்தைத் தளமாகக் கொண்ட பராமரிப்பை ஊக்குவித்தல், குழந்தைகளுக்கான புதிய மூன்று இலவசத் தடுப்பூசி மருந்துகளை இணைப்பதனூடாக ஒன்ராறியோ மக்களது சுகாதாரத்தை முன்னேற்றுதல், ஆரோக்கியம் மிக்க வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல், அரசாங்க நிதியளிப்பினை அதிகரித்தல் என்பவற்றின் மூலமாக மேலும் சாதுரியமாகச் செலவு செய்தல்.

## மாணவர்களுக்கான வெற்றி

பாடசாலைக்கு முன்னான நிலையிலிருந்து உயர்தரப் பாடசாலைப் பட்டமளிப்பு வரை எமது குழந்தைகளின் கல்வியில் நாம் தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றோம்.

- நான்கு வருட கூட்டு உடன்படிக்கைகளூடாக எமது பாடசாலை அமைப்புக்களில் நியைான அமைதியும் உறுதிநிலையும் - நான்கு வருட கூட்டு உடன்படிக்கைகளுக்கு நன்றி;
- மிகச் சிறந்த ஆரம்பம் எனப்படும் Best Start திட்டமானது குழந்தைப் பராமரிப்பு இடவசதிகளை அதிகரிப்பதுடன் குழந்தைப் பராமரிப்புக் கட்டண மானியங்களையும் விரிவுபடுத்தும்;
- 1,300 பாடசாலைகள் - ஒவ்வொரு மூன்று ஆரம்ப பாடசாலைகளில் ஒன்று - கனிஷ்ட பாலர் வகுப்பு முதல் மூன்றாம் தரம் வரை சிறிய வகுப்புக்களைக் கொண்டுள்ளன; மற்றும்
- மாணவர்களது மேலும் சிறந்த பரீட்சை முடிவுகள், வாசிப்பிலும் கணிதத்திலும் மாகாண தராதரத்தை மாணவர்கள் அடைய உதவும் வகையில் 8,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி - அத்துடன் விரைவில் மேலும் 8000 பேருக்கான பயிற்சி.



## உறுதியான பொருளாதாரம்

உள்கட்டமைப்பு மற்றும் பதியன கண்டறிதல் என்பவற்றில் தீவிரமாக முதலீடு செய்வதனூடாக எமது பொருளாதாரத்தை நாம் வலுவாக்குகின்றோம்.

- வீதிகள், போக்குவரத்து, வைத்தியசாலைகள், பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்பவற்றிற்காக ஐந்து வருட 30 பில்லியன் டொலர் உள்கட்டமைப்புத் திட்டம்;
- அரசாங்கம் பதிவியேற்ற காலம் தொடக்கம் 146,000 புதிய வேலைகள்;
- கட்டுப்படியாகக்கூடிய வீடுமைப்பின் 15,000 அலகுகள்;
- வாகனத்துறை உத்திமுறையானது 3..5 பில்லியன் டொலர் பெறுமதிமிக்க புதிய முதலீடுகளைப் பெருக்குகின்றது;
- புதியன கண்டுபிடித்தலில் வட அமெரிக்காவிலும் உலகிலும் இந்த மாகாணத்தை முன்னணி வகிக்க வைப்பதற்கு ஒன்றாறியோவின் ஆராய்ச்சி சபை (Research Council of Ontario) முன்மொழியப்பட்டுள்ளது; மற்றும்
- கலாச்சார தொழிற் துறைகள், புதிய ஊடகங்கள், கலாச்சார சுற்றுலாத் துறைகள் ஆகியவற்றிற்கென புதிய உதவிகள்;

## பொறுப்பு வாய்ந்த பொதுநிதி முகாமைத்துவம்

அரசாங்கத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ள வரவு செலவுப் பற்றாக்குறையை அகற்றுவதற்கென ஒரு சமநிலையான, பொறுப்பு வாய்ந்த அணுகுமுறையை நாம் மேற்கொள்கின்றோம் - அது பயனும் அளிக்கின்றது. பற்றாக்குறையினை அகற்றும் தருணத்தில், கல்வி, சுகாதாரம், ஒரு வலுவான பொருளாதாரம் என்பவற்றில் முக்கிய முதலீடுகளைச் செய்வதற்கு எம்மை அனுமதிக்கும் ஒரு அணுகுமுறை இதுவாகும்.

- 2004-05 பற்றாக்குறை 3 பில்லியன் டொலராகக் குறைக்கப்பட்டது - அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற பற்றாக்குறைத் தொகையில் சுமார் பாதி;
- ஆகக் கூடியது 2008-09 அளவில் பற்றாக் குறையை அகற்றிக் கொள்ளல்;
- புதிய வரிகள் இல்லை;
- அரசாங்கத்தின் செயல் திறனில் 400 மில்லியனுக்கும் அதிகமான டொலரை இனங்கண்டுள்ளமை; மற்றும்
- 15 அமைச்சுக்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருத்தல்.

www.ontariobudget.fin.gov.on.ca

## மேலும் 2005 ஒன்றாறியோ வரவு செலவுத் திட்டத் தகவல்கள்

2005 ஒன்றாறியோ வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொது விசாரணைகளுக்கு:

நிதியமைச்சு தகவல் நிலையம்
Ministry of Finance Information Centre

கட்டணமற்ற ஆங்கில மற்றும் பிரெஞ்சு தொலைபேசி
விசாரணைகள்: 1-800-337-7222
கேட்டல் குறைபாடு: 1-800-263-7776

இந்த ஆவணத்தின் மின்பிரதிகளுக்கு, எமது இணையத் தளத்துக்கு விஜயம் செய்க:
www.ontariobudget.fin.gov.on.ca

அச்சிடப்பட்ட இலவசப் பிரதிகள் கிடைக்குமிடம்:

Publications Ontario
880 Bay Street, Toronto, Ontario M7A 1N8
தொலைபேசி: (416) 326-5300
கட்டணமற்றது: 1-800-668-9938
கேட்டல் குறைபாடுடையோர் கட்டணமற்ற தொலைபேசி:
1-800-268-7095
இணையத் தளம்:
www.publications.gov.on.ca

ஒன்றாறியோ அரசாங்கத்தினால் பணம் செலுத்தப்பட்டது

Tamil